www.prepp.in

Prepp
Your Personal Exams Guide

**Lang. Code : 17**

इस पुस्तिका में **20** पृष्ठ हैं ।
This booklet contains **20** pages.

# TAJ 19-II

**प्रश्न-पत्र II / PAPER II**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग IV & V / PART IV & V**

**परीक्षा पुस्तिका संकेत**
**Test Booklet Code**

**W**

**परीक्षा पुस्तिका संख्या**
**Test Booklet No.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें । / For instructions in Tamil see Page 2 of this Booklet.**

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **W**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **W** । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ______________________
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) ______________________
Roll Number : in figures
: (शब्दों में) ______________________
: in words
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ______________________
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ______________ निरीक्षक के हस्ताक्षर : ______________
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile signature stamp of
Centre Superintendent ______________________

W

www.prepp.in



**Lang. Code : 17**

# TAJ 19-II

தேர்வு நூற்கட்டு
சங்கேதக் குறியீடு

**W**

இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது

## தாள் II

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I & பகுதி II **அல்லது** III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு W ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய 60 பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.
   பகுதி IV : மொழி - I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி V : மொழி - II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

www.prepp.in



prepp Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - IV** [**கே.எண்: *91 - 120***]க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - IV [Q.No. 91-120]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - I** only.

www.prepp.in



**PART – IV**
**LANGUAGE – I**
**தமிழ்**

| |
|---|
| பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (**LANGUAGE – I**) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – **IV** (கே.எண்: **91-120**) க்கான விடைகளைத் தரவேண்டும். |

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் **91-99**)

மக்கள் ஊடகங்களின் வளர்ச்சி இன்று வியப்பூட்டும் அளவில் உள்ளது. செய்தித்தாள் எனப்படும் நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி. திரைப்படம், இணையப் பதிப்புகள் என்று பல்வேறு வகைகளில் வளர்ச்சி பெற்று மக்களுக்குச் செய்திகளைத் தருவனவாக இவ்வூடகங்கள் விளங்குகின்றன. இவற்றை அச்சு ஊடகங்கள், மின்னணு ஊடகங்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை அரசியல், சமூகம், பொருளாதாரம், இலக்கியம், விளையாட்டு, தத்துவம், சமயம் சார்ந்த பல செய்திகளை மக்களுக்கு அறிவித்து மக்களைச் சிந்திக்கச் செய்கின்றன. இவ்வுள்ளடக்கங்களைத் தெரிவிப்பதற்கு இவ்வூடகங்கள் மொழியைக் கையாளும் திறம் தெளிவாக அமைய வேண்டும்.

அப்போதுதான் மக்களிடம் அவை தெரிவிக்கும் கருத்துகள் சென்று சேரும். மொழியைக் கவனமாகப் பயன்படுத்திக் கருத்துகளைத் தெரிவிக்க வில்லையெனில் மக்கள் இவ்வூடகங்களோடு தொடர்பு கொள்வதை விட்டுவிடுவர். செய்திகளை ஒருவிதக் கவர்ச்சி மொழியில் தருவதை பெரும்பான்மையான ஊடகங்கள் உத்தியாகக் கையாள்வதும் ஒருவகை மொழிப் பயன்பாட்டு முறை ஆகும்.

ஒருவித அலங்கார மொழி அமைப்பைக் கையாண்டு ஒரு சொல் ஜாலத்தை தோற்றுவித்துக் காட்டி, வாசகரைக் கவர்வதைத் தமிழ் ஊடகங்களில் பரவலாகக் காண முடிகிறது. இவ்வகை அமைப்பில் வாசகரை மகிழ்வித்துச் செய்திகளைத் தெரிவித்தல் ஊடகவியலாளரின் நோக்கமாகிறது.

தற்காலத்தில் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருக்கும் பொதுவான ஊடகங்கள் பின்வருவன ஆகும். அச்சு ஊடகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் முதலியன. மின்னணு ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், வலைதளம், முகநூல், வாட்சப், டிவிட்டர் போன்றவை மூலம் செய்திகள் கருத்துகள் காட்சிகள் பிறருக்கு வந்து சேர மொழி ஒரு முதன்மைக் கருவியாக செயல்படுகிறது.

தொடக்கத்தில் சமயக் கருத்துகளைப் பரப்பவே தமிழில் இதழ்கள் தோன்றின. தமிழ் இதழியலுக்கு அடிக்கல் நாட்டியவர்கள் கிறித்தவப் பாதிரியார்கள் ஆவர், 1831-ஆம் ஆண்டு சென்னைக் கிறித்தவ சமயச் சங்கம் தமிழ்ப் பத்திரிகை என்ற மாத இதழை முதன்முதலில் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து கிறித்தவப் பாதிரிமார்கள் இதழ்களைத் தொடங்கினர்.

இவ்வகையில் 30 ஆண்டுக் காலம் கிறித்தவ இதழ்கள் வெளிவந்தன. 1864-இல் இந்து சமயத்தினர் தமது சமயம் சார்ந்த இதழ்களைத் தொடங்கினர். 1864-இல் சென்னைப் பிரம்ம சமாஜம் தத்துவ போதினி என்ற இதழை வெளியிட்டது. தமிழ் இதழியல் வளர்ச்சியில் தொடர்ந்து நாட்டு விடுதலை இயக்க இதழ்கள் வெளிவரலாயின. 1882-இல் விடுதலை இயக்கம் சார்ந்த வார இதழ்களாக அறிமுகமான சுதேச மித்திரன், பாரதி நடத்திய இந்தியா, விஜயா, கர்மயோகி, சக்கரவர்த்தினி என்பவை, 1917 ஆம் ஆண்டில் வெளியாகிய திரு.வி.க.வின் தேசபக்தன், நவசக்தி, 1926 இல் வெளிவந்த தமிழ்நாடு போன்றவை இவ்வகையில் குறிப்பிடத் தக்கவை.

இதழ்களின் நோக்கம் கருத்துப் பரிமாற்றம் என்ற ஒன்றுதான். தத்தம் கருத்தைத் தெரிவிப்பதற்குத் தலைசிறந்த கருவியாக இவ்விதழ்களுக்குக் கைகொடுப்பது மொழியே. பேச்சு மொழியில் எழுதுதல் ஆங்கில மொழிக் கலப்புடன் எழுதுதல் குறிப்பிட்ட ஆயத்தச் சொல் மற்றும் சொற்றொடர் அமைப்புகளைக் கையாண்டு வேறுபடுத்துதல் என்று மொழியை கவர்ச்சிகரமாக பயன்படுத்துக்கின்றன. மேலும் தமிழ் இதழ்கள் பேச்சு மொழியினைப் பயன்படுத்தி எழுதுதல் என்ற முறையை விரும்பிக் கையாளுகின்றன. பேச்சுமொழி இவ்விதழ்களின் நடையில் இரண்டறக் கலந்து அமைகின்றது. மக்களின் பேச்சு வழக்கில் உள்ளது போலவே சொற்களும் சொற்றொடர்களும் பயன்படுத்தப்படுகின்றன.

**91.** மொழியைக் கையாள்வதில் கவனம் கொள்ள வேண்டியவை :

(1) அலங்காரம், கவர்ச்சி, சொல் ஜாலம்

(2) கவர்ச்சி, திறம், அரசியல்

(3) தெளிவு, கருத்து, மகிழ்வு

(4) உத்தி, அலங்காரம், கவர்ச்சி

**92.** மின்னணு ஊடகங்களில் புதிதாக இணைந்த வடிவங்கள் :

(1) நாளிதழ்கள், நூல்கள், வலைதளம், தொலைக்காட்சி

(2) மொழியை முற்றிலும் பயன்படுத்துவதில்லை

(3) சமயக் கருத்துகளை அதிகம் பரப்புகின்றன

(4) வலைதளம், முகநூல், வாட்சப், டிவிட்டர்

**93.** மின்னணு ஊடகங்கள் ________, ________, ________ கொண்டு சேர்க்கின்றன, இவற்றில் ________ ஒரு முதன்மைக் கருவியாக உள்ளது :

(1) வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்களை, அச்சு

(2) செய்திகள், கருத்துகள், காட்சிகளைக், மொழி

(3) நாளிதழ்கள், வானொலி, காட்சிகளைக், கருத்துகள்

(4) செய்திகள், கருத்துகள், காட்சிகளைக், இலக்கியம்

**94.** முதல் தமிழ்ப் பத்திரிகையைத் தொடங்கியது ________ தத்துவ போதினி என்ற இதழை ________ வெளியிட்டது.

(1) சென்னைக் கிறித்தவ சமயச் சங்கம், சென்னைப் பிரம்ம சமாஜம்

(2) இந்து சமயச் சங்கம், கிறித்தவ சமயச் சங்கம்

(3) நாட்டு விடுதலை இயக்கம், பிரம்ம சமாஜம்

(4) சென்னைக் கிறித்தவ சமயக் கழகம், பிரம்மஞான சபை.

www.prepp.in



**95.** பாரதி நடத்திய வார இதழ்கள் ________, ________, ________, ________.

(1) சுதேசமித்திரன், தேசபக்தன், இந்தியா, கர்மயோகி

(2) இந்தியா, சக்கரவர்த்தினி, கர்மயோகி, விஜயா

(3) நவசக்தி, இந்தியா, விஜயா, கர்மயோகி

(4) தேசபக்தன், சுதேச மித்திரன், நவசக்தி, சக்கரவர்த்தினி

**96.** ஆங்கில மொழிக்கலப்பு கொண்ட மொழி ________ தேவையாக உள்ளது, இதற்குக் காரணம் ________.

(1) வேறுபடுத்தத், இதழ்களின் நடை

(2) கவர்ச்சிக்குத், சொற்களும் சொற்றொடர்களும்

(3) கருத்துப் பரிமாற்றத்திற்குத், மக்களின் பேச்சு வழக்கு

(4) மக்களுக்குத், சொற்றொடர் அமைப்புகள்.

**97.** சொற்களும் சொற்றொடர்களும் ________ உள்ளது போல அமைந்துள்ளது, இதற்கான நோக்கம் ________.

(1) எளிமையாக, இதழ்களின் நடை

(2) ஆங்கில இதழ்களில், மக்களின் பேச்சுவழக்கை பரிமாறுவது

(3) மக்களின் பேச்சுவழக்கில், இதழ்களில் மொழி எளிமை

(4) மக்களின் பேச்சுவழக்கில், கருத்துப் பரிமாற்றம்

**98.** நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் ______ எனப்படும்.

(1) அச்சு ஊடகங்கள்

(2) மக்கள் ஊடகங்கள்

(3) தமிழ் ஊடகங்கள்

(4) மின்னணு ஊடகங்கள்

**99.** அலங்கார மொழியைப் பயன்படுத்தும் ஊடகங்களின் நோக்கம் :

(1) கவர்ச்சி மொழியில் கருத்தை மறைப்பது.

(2) மகிழ்ச்சியளித்து செய்திகளை தெரிவித்தல்.

(3) வாசகர்களைக் கவர்ந்து சிந்தனையைத் தடுப்பது

(4) மொழிப்பயன்பாட்டில் புதுமையைப் புகுத்துவது.

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 100-105)

புத்தர் நடந்த திசையிலே – அருள்
பொங்கி வழிந்த திசையிலே
சித்தம் மகிழ்ந்து நடந்திட – ஒரு
தெய்வ மனிதன் வருகிறான்!

விண்ணிற் பிறந்தவன் என்றிட-முகம்
விண்சுட ராகப் பொலிவுற
மண்ணிற் பிறந்த மனிதருள் – புது
மைந்தன் பிறந்து வருகிறான்!

மன்னன் அசோகனும் காந்தியும் – திரு
வள்ளுவன் என்றவே தாந்தியும்
சொன்ன படிக்கு நடந்திடப் – பரி
சுத்த மனிதன் வருகிறான்!

www.prepp.in



Prepp Your Personal Exams Guide

சொல்லும் செயலும் ஒருதொழில் – எனும்
தொன்மை நெறியைத் தொடர்ந்திடக்
கல்லும் உருகும் கருணையை – இரு
கண்ணெனக் கொண்டு நடந்திட,

நல்ல மனிதன் வருகிறான் – தமிழ்
நாட்டு மனிதன் வருகிறான்!
வல்லமை கொண்டு வளர்ந்திடப் – புவி
வாழ்ந்திடச் செய்ய வருகிறான்!
'மண்மிசை அன்பை விதைத்திடில் – அது
மாமர மாகிக் கனிதரும்!
உண்ண மரணம் ஒழிந்திடும்' – என
ஓதும் மனிதன் வருகிறான்!
பள்ளமும் மேடும் குறுக்கிடில் – இசை
பாடி நடந்து கடப்பவன்!
கள்ளமும் வஞ்சமும் கண்டிடில் – இரு
கால்களில் ஏற்றிப் புடைப்பவன்!
நற்கலை கற்றுத் தெளிபவன் – தமிழ்
நாட்டை உயர்த்தும் மனிதனாம்!
பொற்சுட ராகப் பொலிவுற – இந்தப்
புண்ணிய மைந்தன் வருகிறான்!

100. புது மைந்தனின் தோற்றம் பற்றிக் கவிஞர் கூறுவது :

(1) விண் சுடராக விழிகளில் ஒளி கொண்டு புதுத் தோற்றம்

(2) அருள் சுடரும் முகம் கொண்ட பொலிந்த தோற்றம்

(3) விண்ணில் பிறந்தவன் போல் கதிரவன் ஒளி கொண்டு முகம் பொலியும் தோற்றம்

(4) மண்ணில் புதிதாகப் பிறந்த மைந்தன் போல் முகம் கொண்ட தோற்றம்.

101. அசோக மன்னன், காந்தி, வள்ளுவன் வழி நடக்கும் ஒருவனை இக்கவிதை இவ்வாறு குறிப்பிடுகிறது :

(1) முழுத்தூய்மை பெற்ற மனிதன்

(2) வேதாந்தம் அறிந்த மனிதன்

(3) சொன்னபடி நடக்கும் மனிதன்

(4) தொன்மை நெறியறிந்த மனிதன்

102. பழமையான பாதையெனக் கவிஞர் குறிப்பிடுவது :

(1) கருணையைக் கண்ணெனக் கொண்டு நடக்கும் பாதை

(2) சொல், செயல் இரண்டும் பிளவுபடாமல் இணைந்து அமையும் பாதை

(3) தொழிலில் சொல்லும் செயலும் தொடரும் பாதை

(4) சொல்லையும் செயலையும் ஒரு தொழிலாகத் தொடர்ந்து செய்யும் பாதை

103. மரணம் ஒழிய வழி என இங்கு குறிப்பிடப்படுவது எது?

(1) இசைபாடிக் கடந்து செல்வது

(2) வல்லமை கொண்டு வளர்ந்து புவியை வாழச் செய்வது

(3) கலைகளைக் கற்றுத் தெளிவது

(4) அன்பை விதைத்து அது மரமாகித் தரும் கனியை உண்பது

Prepp
Your Personal Exams Guide

104. நற்கலை, பொற்சுடர் இவை முறையே இவ்வாறு பகுக்கப்படும் :
(1) நற் + கலை, பொன்மை + சுடர்
(2) நல்ல+கலை, பொற்+சுடர்
(3) நன்மை+கலை, பொன்+சுடர்
(4) நன்+கலை, பொன்+எனும்+சுடர்

105. தெய்வ மனிதன் நடக்கும் வழி எனக் கவிதை கூறுவது :
(1) புத்தரிடம் பக்தி கொண்டு, அருள் தேடி நடக்கும் பாதை
(2) புத்தர் காட்டிய அருள் நிறைந்த பாதையில் அறிவு மகிழ நடக்கும் வழி
(3) சித்தம் மகிழ்ந்து புத்தர் நடந்த திசை
(4) விண்ணில் பிறந்து அருள் பொங்கும் திசையில் அமைந்த பாதை

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 106-120)

106. கவிதையைக் கற்பிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியதில் மிகமிக முக்கியமானது எது?
(1) ஒவ்வொரு கவிதையும் ஒரு உறுதியான பொருளைக் கொண்டுள்ளது
(2) கவிதைகள் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களைக் கொண்டவை
(3) ஒரு கவிதை சமூகப் பிரச்சினைகளைப் பிரதிபலிப்பதில்லை
(4) ஒரு கவிதை எந்த உணர்ச்சித் தன்மையையும் பிரதிபலிப்பதில்லை

107. செய்திக்கதை எழுதும் முறையைக் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் செய்தித்தாளில் வெளிவந்த செய்திகளைக் கத்தரித்து மாணவர்களிடம் விநியோகம் செய்கிறார். செய்திகளை வாசித்து அது பற்றிய மாணவர்களின் கருத்துகளை எழுதும்படி கேட்கிறார். செய்தித் துணுக்குகளை வகுப்பில் அந்த ஆசிரியர் ஒரு ________ பயன்படுத்துகிறார் :
(1) கற்பித்தல் துணைக் கருவியாக
(2) கற்றுக் கொள்ளுதலுக்கான துணைக் கருவியாக
(3) கற்பித்தல் கற்றலுக்கான பாடப்பொருளாக
(4) கற்பித்தல் முறை மற்றும் உத்தியாக

108. இந்தியாவில் எத்தனை மொழிக் குடும்பங்கள் உள்ளன?
(1) நான்கு
(2) ஆறு
(3) எட்டு
(4) பத்து

109. மொழி வகுப்பில் தாய் மொழியைப் பயன்படுத்தாத மொழிக் கல்வி முறை எது?
(1) நேரடி முறை
(2) மொழி ஒலிப்பு முறை
(3) கருத்தூன்றிய முறை
(4) இயற்கை முறை

www.prepp.in



**110.** மொழியைக் கற்பிக்கும் ஒரு ஆசிரியர் அறிவியல், சமூக அறிவியல் எடுத்துக் காட்டுகளைத் தருகிறார், இந்த அணுகுமுறை இவ்வாறு அழைக்கப்படுகிறது :

(1) அறிவியல் மற்றும் மொழிக் கற்பித்தல்

(2) பாடத்திட்டம் கடந்தமைந்த மொழிக் கற்பித்தல்

(3) டி பி ஆர் முறை

(4) சி எல் டி முறை

**111.** மொழி கற்றல் குறித்த உணர்ந்தறிதல் திறன் சார்ந்த பார்வை இதற்கு அழுத்தம் தருகிறது :

(1) மொழி கற்றலின் ஒரு பகுதிதான் பிழைகள்

(2) மொழி கற்றலுக்கு பழக்கவழக்க உருவாக்கச் செயல்பாடு உதவுகிறது.

(3) உரையாடல்களை மனப்பாடம் செய்வதையும் திரும்பத் திரும்பப் பேசிப் பழகுவதையும் ஆசிரியர் ஊக்கப்படுத்த வேண்டும்

(4) பிழைகள் உடனுக்குடன் திருத்தப்பட வேண்டும் இல்லையெனில் குழந்தையின் மனதில் அது படிந்துவிடும்

**112.** மாணவர்களின் குறைபட்ட தேர்வு எழுதும் நிலைக்கு, அவர்களின் மந்தமான நிலைக்குக் காரணத்தை அறிய வேண்டி ஒரு ஆசிரியர் தனியாக ஒரு தேர்வு நடத்தத் திட்டமிடுகிறார், அத்தேர்வு :

(1) புரோஃபிஷியன்சி தேர்வு

(2) டயக்னாஸ்டிக் தேர்வு

(3) அச்சிவ்மெண்ட் தேர்வு

(4) சம்மேடிவ் தேர்வு

**113.** ஆறாம் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மாணவர்களின் தேர்வுத் தாள்களைப் பரிசோதித்தபின் அவர்கள் சரியாக எழுதவில்லை என்பதைக் கண்டு அறிகிறார். அதற்குப் பிறகு மற்றொரு தேர்வை நடத்துகிறார். இத்தேர்வு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) ஃபார்மேடிவ் தேர்வு

(2) சம்மேடிவ் தேர்வு

(3) டயக்னாஸ்டிக் தேர்வு

(4) குமுலேடிவ் தேர்வு

**114.** ஒரு மொழி ஆசிரியர் தனது வகுப்பு ஒன்றில் கற்பித்த பிறகு தனது குறிப்பேட்டில் இவ்வாறு எழுதுகிறார், "மொழி விளையாட்டு மாணவர்களுக்கு மிகவும் ஆர்வமூட்டுவதாக இருந்தது, ஈடுபாட்டுடன் அவர்கள் பங்கேற்றார்கள், ஆனால் மூன்றாவது குழுவைச் சேர்ந்த மாணவர்கள் பதில் அளிக்கச் சிரமப்பட்டார்கள்." இது அந்த ஆசிரியரின் ________ ஒரு எடுத்துக்காட்டு.

(1) மதிப்பீட்டு முறைக்கு

(2) நிகழ்ச்சி நிரல் குறிப்பேட்டு முறைக்கு

(3) பதில் வினையாற்றும் சிந்தனைக்கு

(4) கவனித்தறியும் முறைக்கு

www.prepp.in



Prepp
Your Personal Exams Guide

**115.** திறன்மிகுந்த மொழியாசிரியர் என ஒருவரைக் கூற வேண்டுமானால்:

(1) அவர், பாடநூல்களில் உள்ள கேள்விகள் அனைத்திற்கும் விடையளிப்பவர்களாக குழந்தைகளை உருவாக்க வேண்டும்.

(2) அவர், பாடநூலைப் பயன்படுத்துவதுடன் அதற்கப்பாலும் பலவற்றைக் கற்பிக்க வேண்டும்.

(3) அவர், பாடநூலை முழு அடிப்படையாகக் கொண்டு கேள்வித் தாள்களைத் தயாரிப்பவராக இருக்க வேண்டும்.

(4) அவர், பரிந்துரைக்கப்பட்ட பாடநூலுக்கு அப்பால் போகாதவராக இருக்க வேண்டும்

**116.** மொழிக் கற்றலில் மிகவும் முக்கியமானது எது?

(1) பாடநூல்

(2) துணைப்பாடநூல்

(3) குழந்தைகள் இலக்கியம்

(4) செய்முறைப் பதிவேடு

**117.** பின்வருவனவற்றில் எது மாணவர்களின் படைப்புத் திறனை வளர்க்கக் கூடியதாக உள்ளது?

(1) தேர்வில் நல்ல மதிப்பெண் பெறக் கூடிய வகையில் மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பது.

(2) மாணவர்களின் அனுபவங்களைத் தங்கள் போக்கில் எழுதுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது.

(3) நீதிநெறிக் கதைகளை எழுதி வாசிக்கும்படி மாணவர்களைக் கேட்பது.

(4) கற்றலில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளும்படி மாணவர்களிடம் கேட்டுக் கொள்வது.

**118.** மொழிக்கல்வியில் 'மைண்ட் மேப்பிங்' என்பது:

(1) மனதில் படத்தை வரைவது

(2) கதை/கவிதையில் இடம் பெறும் சூழலின் வரைபடத்தை வரைவது

(3) ஒரு சாதனையைச் செய்வதற்கான திட்டத்தை உருவாக்கி அளிக்கும்படி மாணவர்களிடம் கூறுவது

(4) புரிதலின் அடிப்படையில் புதிய கருத்துகளை உருவாக்கி அவற்றுக்கு இடையிலான தொடர்புகளைத் தட்டியெழுப்ப மாணவர்களை அனுமதித்தல்.

**119.** எழுதும் திறமையை மேம்படுத்துவதில் மிகமிக முக்கியமானது எது?

(1) நல்ல கையெழுத்தில் எழுதுவது

(2) சரியான எழுத்து உச்சரிப்பு வடிவில் எழுதுவது

(3) வழிமுறைக் குறிப்புகளையும் விளக்கக் குறிப்புகளையும் பயன்படுத்தி எழுதுவது

(4) ஒருவரின் பார்வைகள், கருத்துகள், அனுபவங்கள் வெளிப்படும்படி எழுதுவது.

**120.** மனமகிழ்ச்சிக்காகவும் பொதுவான வாசிப்புத் திறமையை வளர்த்துக் கொள்வதற்காகவும் ஒரு பாடப்பகுதியை வாசிக்கும் முறையை இவ்வாறு கூறலாம் :

(1) உற்று அறியும் வாசிப்பு

(2) விரிவான வாசிப்பு

(3) முன்னமையும் வாசிப்பு

(4) பின்னமையும் வாசிப்பு

www.prepp.in



prepp Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - V** [***கே.எண்: 121 - 150***] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - V [Q.No. 121-150]**, if they have opted **TAMIL** as **LANGUAGE - II** only.

www.prepp.in



Prepp
Your Personal Exams Guide

## PART – V
## LANGUAGE – II
## தமிழ்

பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.

**(Q. Nos. 121-128) :**

தமிழகத்தில் பௌத்த சமயம் சிறப்புற்றிருந்த காலத்தில் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் புத்தரது திருவடிகள் பதித்த பீடங்கள் என்ற பீடிகைகள் இடம் பெற்றிருந்தன. புத்த பீடிகைகள் மக்களால் போற்றி வணங்கப்பட்டன. அவற்றின் பெருமையைப் பல இடங்களில் சாத்தானார் விரிவாகப் பேசிச் செல்கிறார். புகழமைந்த நிலத்தில் மூன்று முழ அளவு உயரத்தில் நான்கு திசையிலும் ஒன்பது முழ அளவில் இடம் அகன்று, விதிமுறைகளுக்கு ஏற்ப, சிறந்த பளிங்கினால் வட்டமாய் அமைந்து இடையில் சதுர வடிவத்தின் மீது தாமரை ஒளி வீசுவதாய் அமைய வேண்டும். இதுவே புத்தருக்கு உரிய பீடம். இது மணிபல்லவத் தீவில் அமைந்திருப்பது.

இந்தப் பீடத்தின் அருகில் உள்ள மரங்கள் நறுமலர்களை மட்டுமே சொரியும். பறவைகளும் அப்பீடிகையின் அருகில் தம் சிறகுகளை அசைத்து ஒலி செய்யா, தூய மனத்துடன் தொழுது நின்றால் முந்தைய பிறவியைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். அந்தப்பீடத்தின் சிறப்பை உணர்ந்த இந்திரன் அந்தப் பீடத்தில் மணிகளைப் பொருத்திப் போற்றினான்.

மணிபல்லவத் துயருற்ற காதையில் உவவனம் என்பது சோலையாகும். பதும பீடம் என்பது தாமரை வடிவில் அமைந்த பீடமாகும். உயிர்களிடத்தில் அருள் கொண்டவன்; ஆருயிர்களைப் பாதுகாக்கும் ஒப்பற்ற இலட்சியத்தை உடையவன்; இப்படிப்பட்ட புத்த தேவனின் ஆணையால் பூத்துக் குலுங்கும் உவவனத்தில் ஒரு மண்டபம் உள்ளது. அதன் தனிச் சிறப்பாவது, அது அங்கிருப்பவரின் ஓசையை வெளிப்படுத்தாது. உருவத்தை மட்டும் வெளியே காட்டும் அந்த மண்டபத்தின் உள்ளே தூய நிறமுடைய மாணிக்கத்தால் அமைந்த ஒளி பொருந்திய பதுமபீடம் அமைந்திருந்தது.

பதுமபீடத்தில் அரும்புகளை வைத்தால் அவை மலரும். மலர்ந்தவை பல ஆண்டுகள் ஆன பின்பும் வாடுவதில்லை. அவற்றில் வண்டுகளும் மொய்ப்பதில்லை. காணிக்கை செலுத்துவோர் ஏதேனும் ஒரு தெய்வத்தை மனதிலே நினைத்து அப்பீடத்தில் மலரை வைத்தால், அம்மலர் அவர் கருதிய தெய்வத்தின் திருவடிகளைச் சென்றடையும். ஒரு நினைப்பும் இன்றி மலரிட்டால் அது எங்கும் செல்லாது; அங்கேயே இருக்கும். இத்தகைய சிறப்பினை உடைய இந்தப்பீடம் தெய்வத் தச்சனால் அமைக்கப்பட்ட பெருமைக்குரியது. இவற்றைத் தவிர பாத பங்கய மலையில் உள்ள புத்தரின் பாதப் பெருமையும் மணிபல்லவத் தீவின் அருகிலுள்ள இரத்தின தீவகத்தில் உள்ள சமந்த மலையில் இடம் பெற்றுள்ள புத்தர் பிரானின் இணையடிகளின் சிறப்பும் பாத்திரம் பெற்ற காதையில் சாத்தனாரால் விளக்கப்படுகின்றன.

www.prepp.in



**121.** புத்த பீடிகையின் அளவு :

(1) மூன்று முழம், ஒன்பது அடி

(2) ஒன்பது முழ உயரம், மூன்று முழ சதுரம்

(3) நீளம் ஒன்பது முழம், அகலம் ஒன்பது முழம், உயரம் மூன்று முழம்

(4) நீளம் ஒன்பது முழம், அகலம் மூன்று முழம் உயரம் ஒன்பது முழம்

**122.** புத்த பீடிகையைத் தொழ __________ வேண்டும், அதனால் __________ பற்றி அறிந்து கொள்ளலாம்.

(1) தூய மனம், முற்பிறவிகளைப்

(2) நறு மலர்கள், இந்திரனைப்

(3) தூய மனம், பீடத்தின் சிறப்பைப்

(4) நறுமலர்கள், புத்தரைப்

**123.** சோலை இவ்வாறு குறிப்பிடப்படுகிறது : __________ தாமரை வடிவ மேடை __________ எனக் குறிப்பிடப்படுகிறது.

(1) மணிபல்லவம், உவவனம்

(2) உவவனம், மணிபல்லவம்

(3) மண்டபம், பதும பீடம்

(4) உவவனம், பதும பீடம்

**124.** உவவனத்தில் உள்ள மண்டபத்தைப் பற்றி இவ்வாறு கூறலாம் :

(1) உருவத்தை மட்டும் காட்டும், ஓசையை வெளிப்படுத்தாது, அதற்குள் பதும பீடம் அமைந்திருந்தது.

(2) உருவத்தை வெளிப்படுத்தாது, ஓசையைப் புலப்படுத்தும், அது மாணிக்கத்தால் அமைந்தது,

(3) அது பதும பீடத்தைக் கொண்டது, மாணிக்கத்தால் அமைந்தது, ஓசையைப் புலப்படுத்துவது

(4) உருவத்தை மறைத்து, ஓசையைக் காட்டி, மலர்களை மலரச் செய்யும்.

**125.** பதுமபீடத்தில் மலர்களை வைக்கும் போது நிகழ்வதை இவ்வாறு கூறலாம் :

(1) அவை மலரும், நினைத்த தெய்வத்தின் திருவடி அடையும், தெய்வத் தச்சனால் அமைக்கப்பட்டது.

(2) அவை மலரும், ஆண்டு பல ஆனாலும் வாடுவதில்லை, கருதிய தெய்வத்தின் காலடி சேரும், கருதாவிடில் அங்கேயே இருக்கும், வண்டுகள் மொய்ப்பதில்லை.

(3) அவை வாடுவதில்லை, கருதிய தெய்வத்தின் அருளைப் பெறும், கருதாவிடில் எங்கும் செல்லாது.

(4) அரும்புகள் வாடுவதில்லை, வண்டுகள் மொய்ப்பதில்லை, தெய்வத்தின் திருவடி சேரும்.

**126.** பாத்திரம் பெற்ற காதையில் விளக்கப்படுவன :

(1) உவவனம், பதுமபீடம், மணிபல்லவம், பளிங்கு மண்டபம்

(2) உவவனம், இரத்தின தீவகம், பதுமபீடம், மணி பல்லவம்

(3) பாத பங்கய மலையின் புத்த பாதப் பெருமை; சமந்த மலையில் உள்ள புத்தரின் இணையடிப் பெருமை

(4) பதுமபீடம், பாத பங்கய மலை, இரத்தினத் தீவகம், பளிங்கு மண்டபம்

www.prepp.in



Prepp Your Personal Exams Guide

**127.** மலர்கள் குறித்த சொற்களும், நிகழ்வுகளும் இப்பகுதியில் விரவி உள்ளன. அவை முழுமையாக இங்கு இவ்வாறு குறிப்பிடப்படுகின்றன. தேர்வு செய்க.

(1) தாமரை, நறுமலர், பதுமபீடம், மாணிக்கம், தீவு, வண்டுகள்

(2) தாமரை, நறுமலர், சோலை, பூத்துக் குலுங்குதல், பதுமபீடம், அரும்பு, மலருதல், வாடுதல், மலர் சொறிதல், வண்டு மொய்ப்பது, மலரிடுதல், காணிக்கை

(3) மலரிடுதல் மலருதல், நறுமலர், பூத்தல், வாடுதல், தூய மனம், மாணிக்கம், அரும்பு

(4) தாமரை ஒளி, சிறகு அசைத்தல், பூத்தல், வாடுதல், வண்டு மொய்த்தல், காணிக்கை

**128.** புத்த பீடிகைகள் ________ அவை __________ வணங்கப்பட்டன, ______ அமைந்தவை.

(1) சிறப்பான பீடங்கள், மக்களால், தாமரை இதழ்களால்

(2) புத்தரது திருவடிகள் பதிந்த பீடங்கள், மக்களால் போற்றி, பளிங்கினால்

(3) மணிகளால் அமைந்தவை, இந்திரனால், சதுரமாய்

(4) புத்தரது திருவடிகள் பதிந்த பீடங்கள், பறவைகளால், பளிங்கினால்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 129-135)

புதினம் தமிழிலக்கியத்திற்குக் கிடைத்த புதிய வரவு. மேலை நாட்டினர் தொடர்பால் தமிழ் மொழி அடைந்த நன்மைகளில் இதுவும் ஒன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய புதின இலக்கியம், இருபதாம் நூற்றாண்டில் பெரும் வளர்ச்சியைக் கண்டது. புதினங்களைத் துப்பறியும் புதினங்கள், சமூகப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், அறிவியல் புதினங்கள், வட்டாரப் புதினங்கள், மொழி பெயர்ப்புப் புதினங்கள், தழுவல் புதினங்கள் எனப் பிரித்தறியலாம். தனிமனிதனுக்கும், சமுதாயத்துக்கும் உள்ள உறவைப் புதினங்கள் எடுத்துக்காட்டுகின்றன. வாழ்வு எங்கே? சந்திப்பு போன்ற அகிலனின் புதினங்கள் சாதிக்கொடுமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. ரகுநாதனின் பஞ்சும் பசியும் கைத்தறி நெசவாளர் பட்ட கொடுமைகளை எதார்த்த முறையில் சித்திரிக்கும் நாவல். இந்த நாவல் தந்த உந்துதலால் பல்வேறு வகையிலும் ஒடுக்கப்பட்ட மக்கள் மலைவாழ் மக்கள், மீனவர்கள், பெண்கள் போன்றோர் பற்றிய பல நாவல்கள் தமிழில் வெளிவந்தன. அநுத்தமா மணல்வீடு, ஒரே வார்த்தை, கேட்டவரம் போன்ற புதினங்களை எழுதியுள்ளார். தமிழ் நாவலாசிரியர்களில் தான் நினைக்கிற ஒரு கருத்தைப் பாத்திரத்தின் பண்புக்கேற்ப வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்க ஒரு சிலரில் ஜெயகாந்தன் குறிப்பிடத்தக்கவர்.

விடுதலைக்குப் பின்னர் முதலாளித்துவம் வளரத்தொடங்கியது. இந்த நிலையில் தோன்றியுள்ள சமுதாயக் கொடுமைகள் சமுதாயப் பிரச்சனைகள் பல. பொன்னீலன் எழுதியது கரிசல் என்ற புதினம். இது ஒரு கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவர் கேட்பாரற்ற அதிகாரத்துடன் தம்முடைய நிலத்தில் உழைக்கிற மக்களுக்குப் போதிய கூலி கொடுக்காமல் வதைத்து அடக்கு முறையைக் கையாளும் பொழுது, கிராம மக்கள் விழிப்படைந்து உரிமைக் குரல் கொடுப்பதைக் கதைப் பொருளாகக் கொண்டது.

www.prepp.in



**129.** ஒடுக்கப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள், மீனவர்கள், பெண்கள் பற்றிய பல நாவல்களுக்கு உந்துதல் தந்த புதினம் :

(1) வாழ்வு எங்கே?

(2) பஞ்சும் பசியும்

(3) கேட்ட வரம்

(4) கரிசல்

**130.** ஜெயகாந்தனின் ஆற்றல் என இது குறிப்பிடப்படுகிறது :

(1) சாதிக் கொடுமையைச் சுட்டிக் காட்டுவது

(2) எதார்த்த முறையில் சித்தரிப்பது

(3) தான் நினைக்கிற கருத்தைப் பாத்திரத்தின் பண்புக்கேற்ப வெளிப்படுத்துவது

(4) உரிமைக்குரல் கொடுப்பது

**131.** இப்பகுதியில் எத்தனை எழுத்தாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

(1) நான்கு

(2) ஐந்து

(3) ஆறு

(4) மூன்று

**132.** கிராம மக்கள் விழிப்படைந்து குரல் கொடுப்பதைக் கதைப் பொருளாகக் கொண்ட புதினம் __________ , அதன் ஆசிரியர் __________

(1) பஞ்சும் பசியும், ரகுநாதன்

(2) மணல் வீடு, அநுத்தமா

(3) கரிசல், பொன்னீலன்

(4) கரிசல், ஜெயகாந்தன்

**133.** இப்பாடப் பகுதியில் எத்தனை நாவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன?

(1) ஆறு

(2) ஏழு

(3) ஐந்து

(4) எட்டு

**134.** தமிழின் புதின இலக்கியம் __________ உருவானது, அது தமிழிலக்கியத்திற்கு ஒரு __________.

(1) இருபதாம் நூற்றாண்டில், உந்துதல்

(2) மேலை நாட்டினர் தொடர்பால், புதிய வரவு

(3) ஆறு வகையாக, நன்மை அளித்தது

(4) பத்தொன்பதாம் நூற்றாண்டில், மரபுக் கொடை

**135.** புதினம் __________ வகையாக இதில் குறிப்பிடப் படுகிறது, அவை, துப்பறியும் புதினங்கள், __________, __________, அறிவியல் புதினங்கள், __________ தழுவல் புதினங்கள் __________.

(1) ஏழு, சமூகப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள், வட்டாரப் புதினங்கள், மொழி பெயர்ப்புப் புதினங்கள்.

(2) ஆறு, வரலாற்றுப் புதினங்கள், வட்டாரப் புதினங்கள், கிராமப் புதினங்கள்

(3) ஐந்து, சமூகப் புதினங்கள், வரலாற்றுப் புதினங்கள்

(4) எட்டு, சமூகப் புதினங்கள், மேலைநாட்டுப் புதினங்கள், மொழி பெயர்ப்புப் புதினங்கள், பஞ்சும் பசியும்.

www.prepp.in



Your Personal Exams Guide

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 136-150)

**136.** எழுத்துச் செயல்பாட்டுக்கு பின்வருவனற்றில் எது பின்பற்றப்பட வேண்டும்?

(1) சொல் அளவு எல்லை

(2) வண்ணமயமான மொழிப் பயன்பாடு

(3) உடைமைப் பிரதிப் பெயர்ச் சொற்கள் பயன்பாடு

(4) கருத்துக்களை ஒழுங்கமைத்தல்

**137.** எழுதுதல் என்பது ___________ இல்லை, அது ஒரு ___________.

(1) உற்பத்தி; செயல்பாடு

(2) செயல்பாடு; உற்பத்தி

(3) கையெழுத்துப் பயிற்சி; செயல்பாடு

(4) செயல்பாடு, கையெழுத்துப் பயிற்சி

**138.** மாணவர்களின் எழுத்துத் திறனை மதிப்பீடு செய்யும் போது ஓர் ஆசிரியர் இதில் மிக அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

(1) வண்ணமயமான மொழிப் பயன்பாடு

(2) சரியான எழுத்தொலிப்பு

(3) சரியான இலக்கண அமைப்பு

(4) கருத்து வெளிப்படுத்தும் முறை

**139.** வாசித்தலுக்கான முன் ஆயத்தப் பணிகள் இதற்காக அமைக்கப்பட்டவை :

(1) கடினமான சொற்களுக்குப் பொருள்விளக்கம் தருதல்

(2) பாடப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணப் பகுதிகள்/விதிகளுக்கு விளக்கம் தருதல்

(3) மாணவர்களின் வாசித்துப் புரிந்து கொள்ளும் திறனை மதிப்பிடுதல்

(4) பாடப்பகுதி பற்றிய முன்னறிவைத் தூண்டி மாணவர்களை ஆயத்தப்படுத்துதல்.

**140.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் தற்போது எத்தனை மொழிகள் இணைக்கப் பட்டுள்ளன?

(1) 16

(2) 20

(3) 22

(4) 24

**141.** வெவ்வேறு சூழ்நிலைகளில் பாத்திரம் ஏற்று நடிப்பதை மாணவர்களுக்குக் கற்பித்து ஒரு ஆசிரியர் தன் வகுப்பில் முறையான தகவல் தொடர்பு நிலையை உருவாக்குகிறார். அதிலிருந்து சில விதிமுறைகளைக் கண்டறிந்து அப்பொருத்தமான விதிமுறைகளைப் பயன்படுத்த பயிற்சி அளிக்கிறார். அவர் கற்பிப்பது.

(1) விதிமுறை இலக்கணம்

(2) தனித்த இலக்கணம்

(3) இடச்சூழல் சார்ந்த இலக்கணம்

(4) கண்டறிதல் அணுகுமுறை

**142.** எல்லா குழந்தைகளுக்கும் கற்பிப்பதற்கான கற்பித்தல் பாங்கினை ஒரு மொழியாசிரியர் உருவாக்க முடியும், அதற்கான வழி :

(1) ஒவ்வொரு சொல்லையும் கற்பித்து, மொழி பெயர்த்துச் சொல்லி பிறகு பாடத்தை மீள் விளக்கம் செய்வது

(2) குழந்தைகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்தல்

(3) குழந்தைகள் படிப்பதில் மட்டும் இன்றி நடனம், இசை, விளையாட்டு, போட்டிகள், ஓவிய வகுப்புகள் போன்றவற்றிலும் பங்கேற்கும்படி அவர்களை ஊக்கப்படுத்துதல்

(4) பல்வேறு வகைப்பட்ட மாணவர்களுக்கு ஏற்ப பலவகையான கற்பித்தல் முறைகள், உத்திகள் மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகளைப் பயன்படுத்துதல்.

www.prepp.in



**143.** சமூக உறவுப் பரிமாற்றம் மொழிக்கற்றலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைக் கூறியவர் :

(1) சோம்ஸ்கி

(2) பியாஜெட் (பியாஷே)

(3) விகோட்ஸ்கி

(4) ஸ்கின்னர்

**144.** பேச்சுத்திறனில் இது முக்கியமானது:

(1) தெளிவான சரியான உச்சரிப்பு

(2) இடம் மற்றும் சூழ்நிலைக்குப் பொருந்தப் பேசுவது

(3) மென்மையாகப் பேசுவது

(4) வண்ணமயமான மொழிப் பயன்பாடு

**145.** மொழி கற்பதில் ஒரு குழந்தை எதிர்கொள்ளும் குறிப்பிட்ட சிக்கலைப் புரிந்து கொள்ள ஓர் ஆசிரியருக்கு உதவும் ஒரு தேர்வு முறை :

(1) பிரித்தறிந்து மதிப்பெண் தரும் தேர்வு

(2) குறையறிதல் தேர்வு

(3) தகவல் தொடர்பு தேர்வு

(4) குறை நீக்குதல் தேர்வு

**146.** 'மாணவர் செயல்பாட்டுக் கோப்பு' (போர்ட்ஃபோலியோ) பற்றிய கருத்தில் பின்வரும் வாசகங்களில் எது சரியானது?

(1) எழுதும் பழக்கத்தை அது வளர்க்கிறது

(2) மாணவர்களின் செயல்பாட்டு ஆவணங்களை தொகுத்து பாதுகாப்பாக வைத்திருப்பதுதான் அதன் முக்கிய நோக்கம்

(3) ஆசிரியர்களின் வேலை நேரத்தைக் குறைத்து மாணவர்களை அதிக வேலையில் ஈடுபடுத்துகிறது.

(4) ஒரு குழந்தையின் சீரான வளர்ச்சி நிலையை அளவிட ஆசிரியர்களுக்கு உதவுகிறது.

**147.** 'ஒலியழுத்த வேறுபாடு' என்பது இதில் ஏற்படும் மாறுதலைக் குறிப்பது :

(1) ஒலி உறுப்பு

(2) ஒலி அளவு

(3) காற்று

(4) தொனியளவு

**148.** ஒரு குழந்தை வீட்டில் அதிகம் பேசுவதில்லை, ஆனால் பள்ளியில் அதிகம் பேசுகிறாள். இதிலிருந்து தெரிய வருவது :

(1) அவள் தன் வீட்டை விரும்பவில்லை.

(2) அவளுடைய கருத்துகள் பள்ளியில் ஏற்கப்படுகின்றன.

(3) குழந்தைகள் அதிகம் பேசுவதற்கான வாய்ப்புகளைப் பள்ளி தருகிறது.

(4) வகுப்பில் ஒழுங்குமுறையைக் கடைபிடிப்பதில் ஆசிரியர் கவனம் செலுத்தவில்லை.

**149.** மொழி இலக்குத் திறன் பற்றிய கருத்தில் எந்த இரண்டு கூறுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன?

(1) சரியான உச்சரிப்பு, அழுத்தமான வாசிப்பு முறை

(2) பெயர்த்தெழுதல், நல்ல கையெழுத்து

(3) துல்லியத் தன்மை, சரளமான வாசிப்பு

(4) உள்ளடக்கம் காணும் வாசிப்பு, தேடிக்கண்டறியும் வாசிப்பு (ஸ்கிம்மிங், ஸ்கேனிங்)

**150.** மொழி கற்பது எளிதாக அமைய வேண்டும் எனில்:

(1) பாடநூல் கற்பிக்கப்படக் கூடாது

(2) தேர்வு எழுதுதல் இருக்கக் கூடாது.

(3) மொழிவளம் கொண்ட சூழல் அமைய வேண்டும்.

(4) எழுதுவதற்கு முன் இலக்கணப் பயிற்சிக்கும் பழக்கத்திற்கும் அதிக நேரம் தரப்பட வேண்டும்.

www.prepp.in



## SPACE FOR ROUGH WORK

Your Personal Exams Guide

www.prepp.in



**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்புமை பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர் விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப் பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வுக் இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

www.prepp.in



**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्वीच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान हाज़िरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल / कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।**

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY:**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/ room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/ rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/ Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic / Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***